செய்தி வெளியீடு எண்:376 நாள்: 23.5.2008

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறையின் இணைய தளத்தை துவக்கி வைத்தார்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் www.tnrd.gov.in என்ற புதிய இணைய தளத்தை, மாண்புமிகு அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தலைமைச் செயலகத்தில் இன்று (23.5.2008) துவக்கி வைத்தார்கள்.

ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவை தொடர்பான பல்வேறு விபரங்களை கொண்ட இந்த இணையதளம் அரசுத்துறை அலுவலர்களுக்கும், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கும் சிறப்பாக பயன்படும் வகையில் மாண்புமிகு அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவுரைப்படி, தேசிய தகவல் மையத்தின் ஒத்துழைப்புடன், இத்துறையின் மூலம் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இணையதளத்தில் ஊராட்சி நிர்வாகம் தொடர்பான சட்டங்கள், விதிமுறைகள், கொள்கை விளக்க குறிப்புகள், அரசாணைகள், அரசிதழ் அறிவிக்கைகள், மத்திய, மாநில அரசுகள் மற்றும் இதர நிதி ஆதாரங்களின் கீழ் ஊராட்சிகள் மற்றும் இத்துறை மூலம் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்களின் வழிகாட்டி நெறிமுறைகள், ஆவணங்கள், வரைபடங்கள், அடிப்படை விபரத் தொகுப்புகள், கிராம ஊராட்சி நிலை வரை உள்ள அனைத்து ஊராட்சி அமைப்புகளின் தொலைபேசி எண்கள், துறை அலுவலர்கள் விபரம், முக்கிய நிகழ்ச்சிகள் மற்றும் வளர்ச்சிப் பணிகளின் படத்தொகுப்பு, செய்தி வெளியீடுகளின் விபரம், பணிகள் முன்னேற்றம் மற்றும் நிதிப்பயன்பாடு குறித்த புள்ளி விபரங்கள் போன்ற பல்வேறு அவசியமான தகவல்கள் இடம் பெற்றுள்ளன. இந்த இணைய தளத்தின் மூலம் ஊரக வளர்ச்சியுடன் தொடர்புடைய தேசிய மற்றும் சர்வதேச அளவிலான இதர இணைய தளங்களையும் அணுகிட வசதி செய்யப்பட்டுள்ளது.

மிக குறுகிய காலத்தில் இத்தகைய சிறப்பான, பயன்பாடு மிக்க இணையதளத்தை உருவாக்கி பொது பயன்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளமைக்கு ; சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை திரு. க. அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப, இயக்குநர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப , தேசிய தகவல் மைய முதன்மை துணை தலைமை இயக்குநர் திரு.அ.மோகன் தலைமையிலான தொழில்நுட்ப குழுவினர் ஆகியோருக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தனது பாராட்டுக்களை தெரிவித்தார்.

*******

**வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9.**